உ

சிவமயம்



ஸ்ரீ கதிரை மலை
யாத்திரைத் திருப்புகழ்

இஃது

ஸ்ரீமான் உடுமலை முத்துசாமி கவிராயர் சீஷன்
மதுரை நத்தம் ஆர். சுப்பையா உபாத்தியாயர் மகன்

ஆர். சன்முகம் இயற்றியது,

மரவர்குழம்.

உ
ஓம்
சக்தி விநாயகர் சகாயம்.

ஸ்ரீ கதிரை மலை
யாத்திரைத் திருப்புகழ்.

[விநாயகர் விருத்தம்]

அண்டவர்கள் போற்றும் நாதா அருமை சேர் புகழும் வேதா
மண்டலப் பெரியோன் நீதா வரமருள் வரப்பிரசாதா
எட்டிசை மீதில் இபாதா என்கவிக்கருள் வாய்தோதா
விண்டிடவரமே தாதா விநாயகர் துணைவா நாதா.

குருஸ்துதி விருத்தம்.

கவித்தங்கதென்ற யிக்காசினியோர்
தான் புகழும் கரும் தமிழோன்
புலிச்சிங்கமல்லோ உடுமலை முத்துசாமியின்
தாள்போற்றும் சீசன்
செவிக்கின்பம் வோதும் செந்தமிழோசை
திருமதுரை சேர்ந்த நத்தம்
குவிமலைபோல் கோடிதமிழ்க் கூறும்
என் குரு R. சுப்பையா தாள்குப்பிட்டேன் ஞன்

அண்ட பதிரெண்ட மூதல் தண்டாயுதகுரு மரன ஆறுமாமுக
அப்பனை தேடு தேடு அப்பா
கூறும் கதிர்மாமலையை நாடு நாடு
ஆறுமுக சரவனின் பிரனவம் தங்கிட தருணம் தருணம்
இது அம்மை வள்ளியாளை வனம் கண்டவன் கந்தன்
சும்மா தெள்ளி தந்த தினை தின்றவன்.

பாங்கான தேங்காயீதில் ஒங்கி உடையும் தம்பி
வேங்கையான ஐம்புலம் சீர் திருத்தப்பா நாயன்
வாங்கிவந்த சூடதீபம் பொருத்தப்பா பூமி
பஞ்சம் வருமேலை விஞ்சை நடத்தியே
கெஞ்சின மக்களை தஞ்சமாய் காத்திரு
பாண்டி நாட்டு சண்முகம் சொல் பாரப்பா கதிர்
ஆண்டிமலை ஆண்டியே கண் பாரப்பா

மெள்ள நடந்து நாமன் உள்ளம் உருகும்படி
வள்ளி கணவன் பேரை கூரப்பா மூன்னே
வெள்ளவா கடைதெருவை பாரப்பா இங்கே
வேதத் தமிழுடன் கீதத்தொனிகமும்
நாதன் பக்தி எப்போதும் விழங்கிடும்
வெங்கல மனிகடயின் ஜோதியே தமிழ்
பொங்கும் வெள்ள வாக்கடையின் வீதியே

பேருன மாமலையை கோரியே சங்கு நாதம்
நேருன ரோட்டுவழி வோசையே பார்க்க
சீரான நாட்டுவளம் ஆசையே திரு
பிரணவ சொருபனின் கருணைமுளங்குதே
சரவண மூர்த்தியை தருணம் புகழ்ந்துமே
பித்தன மகன் சத்திவடி வேலனை போற்றி
இத்தருணம் புத்தல் வந்தோம் லோலனே

எத்திசையோர் புகழும் புத்தல் நகரை கண்டோம்
மூத்துக் குமரகுரு அய்யா அய்யா உந்தன்
சித்திர பூஞ்சோலை வனம் மெய்யா மெய்யா குகன்
யேழுமலை பதி வாழும் சேவகனே
வேலாயுதக் குகா நாளும் எனைக்காரும்
ஈரூறு கண்ணுல் யிங்கே பாரப்பா ஜெக
வீரூதி வீரனே சொல் சேரப்பா

மூப்பது வருடமாக அப்பனையே காணவென்று
எப்போதும் துதித்து னின்றோம் நம்பியே பால
சுப்பிரமண்யன் வாரதைப்பார் — தம்பியே பச்சை
முத்துக்கள் ரத்தினம் கொத்துச் சரம் பூட்டி
சத்திவேல் தாங்கியே தத்தித்தோம் என்றுடி
மூண்டன் நீலகண்டன் மகன் ஆடியே வாரூர்
வண்டார் கடம்புமாலை சூடியே

பதினூலு பிருயமல்லோ கதிர்காம வேலனுக்கு
குதித்தாடு வாரூற்முன்னே அங்கேயே வளம்
பதிசூழும் கானகத்தில் யிங்கயே முத்து
பச்சை வைடூரியம் வச்சிரப் பதக்கமும்
லக்ஷ்க்கணக் கல்லோ கெச்சை மணியுடன்
புத்திரரை பத்திரமா கார்த்திட வாரூர்
மூத்துமேனித் திரேகமெல்லாம் வேர்த்திட

வானோர் புகழும் புத்தல்தானு நடந்து வந்தோம்
தேனூர் மருதமரம் ஓடையே விட்டு
மீனுத்தினை சத்திரம் மேடையே இங்கே
வாங்க வாங்ளென்று காங்கி அன்னமிடும்
ஓங்கும் போட்டெழுத்து பாங்காத் தெரியிது பார்
மங்காத கொங்கட்டியின் பெருமையும் கண்டோம்
தங்கவேலாயுதத்தின் அருமையும்

கோலாகலம் அமைந்த வேலாயுதம் பிள்ளையின்
மேலான அன்னகொடி முழுக்கமே வெகு
நாளான தர்மநிலை விளக்கமே
கொடுமுடி அலகொல்லை உடுபூசலாப் பக்கம்
நெடுநாள் புகழ்ந்திடும் தொடுபிடியாத் தர்மம்
கோரியே நடத்தும் பிரக் கியாதியே பெரும்
காருளன் வச்சனென்ற சோதியே

கணக்கிலடங்காத மனுக்கள் வருகுதப்பா
மணக்கும்மலை வளத்தின் சோலையில் பக்தி
இணக்கமா செல்லும் யிந்த நாளையின் மலை
காடுவானமதில் பேடைமயில்கழும்
பாடும் குயில் வினை யாடும் மரைகிளா
காட்டுயானை சிங்கம் பன்றி நாடிது அருகரு
கேட்டவுடன் யிங்கே நிறை ஓடுது

கள்ளக்குமாரனுடன் வள்ளிமயிலழகி
துள்ளி விளையாடும் ஊஞ்சல் பார்யிது ஆடி
அள்ளியே தலைமுழுதும் ஆரிது திரு
கன்னி வள்ளியுடன் முன்னே விளையாட
அன்னை தெய்வானையாள் பின்னே மரைந்திட
காவலன களவுகளை கண்டதோர் இடம்
பாவலர் யிதன் மொழியை விண்டார் பார்

நம்பிருசன் வேடனென்ற டம்பவான் வளர்த்தமகள்
தம்பிரான் குகன் மனவி ஆற்றிலே முழுக
தும்பமேவில குமப்பா நாட்டிலே இதை
நாடியே நாமள் நீருடி முடித்துமே
கோடி ஜனத்துடன் கூடி நடந்துமே
நாணயச் சின்னையாச் சீமான் ஊரனி முன்னால்
காணும் செட்டியார்கள் குளம் — தாரணி

கோலாகலக்குமரன் வேலாயுதன் தேவி
ஆலோலம் பாடும் தினப்புன மிது வள்ளி
மேலான குரலோசை வனமிது பட்சி
கொக்குகள் நாரைகள் வக்காவும் கிள்ளையும்
தங்கதோர் பாவையும் அக்கரையாய் வோட்டும்
கூவியேக வனைவும் நாடிது முன்னே
தாவியே ஒழிந்தகல்லு வீடது

நாட்டில் புகழும் நெருகாட்டு வேடன் தன்மகளை
கூட்டிக்கொண்டு வோடினாரும் சுவாமியும் வேடர்
ஈட்டி காட்டி பின்துடர்ந்த பூமியாம் குகன்
நல்ல மதிப்புடன் வள்ளியுடன் கூடி
கல்லு வீட்டினுள்ளே மெள்ள வொழிந்தாரும்
நம்பி ருசன் பெற்ற மக்கள் மறித்தாராம் பின்னால்
தம்பிரானென் றரிந்து பெண்ணை கொடுத்தாராம்

எல்லோர் புகழும் திருகல்லு வீட்டை கடந்தோம்
நல்லவோர் சிரட்டை ஊணர் தீர்த்தமே கண்டு
வல்லாளன் மாமலையை பார்ததோமே புவி
ஈரேழுலகமும் பேருன வேலிதே
நேரே தெரியிது கூறும் கதிர்மலை
யேழுமலை வாழும்பதி காட்டினேன் பெரும்
பாழும்நோய் கருமவினை யோட்டினேன்

சங்காதி சங்கத் தொண்டர் வெங்கல மணியடித்து
எங்களை காரும் என்றே காவடி கொண்டு
மங்கையர் சூழ்ந்தை தோளில் சேவடி தூக்கி
தத்தித்தோ மென பக்தர்களாடியே
முத்துக் குமரகுரு சத்திவேல் வேலென
தண்ணீர் பந்தல் விட்டு எல்லோர் வாருமே ஆருதடி
மன்னாதி மன்னனே கண்பாருமே

அதி வீரசூரனை பதிமேவும் சண்முகனின்
கதிர்காம சேத்திரத்தை பாரப்பா இங்கே
நதி சூழ்வழப் பெருமை கூரப்பா மலை
அப்பனுக் கரோகரு செப்பிறோம் வேலனே
தப்பிதம் கார்த்திடும் சுப்ரமண்யக் குகா
அண்டபகிரெண்ட மெல்லாம் புகழுதே தங்க
தண்டாயுத பண்டாரம் சொல் மகிழுதே

ஆரவாரா வீரசிங்கம் சூரபத்மன் கோட்டை முன்னே
கோரு ரூபம் கொண்டு வேலனை தார்கிறார் கந்தன்
வேர அறுத்து சூரன் நுயிரை போக்கினர் அரக்கன்

தாயர் கண்டமும் சேயர் கறங்கலும்
மாய விநோதனின் பேயனாக நின்றிட
செங்கள் கல கோட்டைகளெல்லாம் இடிந்தது பரம
சங்கரன் மகன் தங்கவேலி நால் மடிந்தது

வல்லன் பக்துமா சூரன் கல்லாக நிண்ட முண்டம்.
எல்லாமே கண்டுகொண்டோம் தம்பி தம்பி நாமும்
செல்வ கதிர்காமம் செல்வோம் நம்பி நம்பி பெரும்

காடும் மலைகளில் ஓடும் புலி கரடி
சாடு யானைகளும் பாடுப்பட்டோடிடும் அந்த
பால சுப்பிரமணியன் றென்றல் பரக்குதாம் எங்கள்
வேலாயுதம் தஞ்சமென்றல் சிரக்குமாம்

பானக்கம் கையிலேந்தி வேனலின் தாகம் தீர்க்க
மூனாம் கட்டை தண்ணீர் பந்தல் பாரண்ணா இதில்
நாளுவித ஜனங்கள் களப்பை தீரண்ணா இனி
கந்தசாமியார் யெந்த நேரமும்
நொந்த ஜனங்களின் சிந்தை மகிழ்ந்துமே
சாமி சாமி என்று தர்ம புண்ணியவான் எங்கள்
நேமியே கைதொழுத கன்யவான்

அருணாசல கந்தப்பன் கருணாகர கணபதி மூர்த்தியே
மருத மரம் மடியினில் தீபம் கண்டோம் கண்டோம் தம்பி
திருவோதர அப்பளா வடையும் தின்றார் தின்றார் இனி
செல்வ கதிர்மலை நின்று மூளுகிய
சில்லரை காசுகள் அள்ளிப் போட்டாரும்
தாங்க முடியாத வெயில் காடப்பா தம்பி
ஓங்கார முருகனை வேண்டி ஓடப்பா

ஆங்கார சிங்கம் புலி ஓங்கார சத்தம் போடும்
தீங்கு செய்ய ஓடிவந்தால் இடம் சொடோம் தம்பி
பாங்கண முருகனை நினைத்தால் பயப்படும் இனி

கருதி நாங்களும் பிரிதியாகவே
ஒருபுரம் நின்று அரோகரம் பாடிய
அப்பனே தேடி யோடி பாடுவோம் தம்பி

பரமதை யானைக்கி அரோகரம் கூருவோம்
நரசிங்கம் ருப முருகன் உரங் கொண்ட சத்தி முருகன் இந்த
அரசமரம் எவ்வளவு காலம் பாருங்கள் தம்பி
சரசமாடின வள்ளிக்கு அரோகரம் கூறுங்கள்

கோடி ஜனங்களும் பாடும் பஜனை கோஷ்டி
போடும் அரோகரம் தேடும் கற்பூரம் தீபம்
அப்பன என்ற சத்தம் எங்கும் முலங்குதே தம்பி
ஆறுமுகம் கற்பூர தீபம் சொலிக்குதே

அந்த பண்டார வேடம் கொண்டு தண்டாயுத தம்பிரான்
ஒண்டி ஒண்டி வள்ளி கோவில் வந்தாரம் கந்தன்
சென்று நின்று அம்மனை முத்தம் தந்தாரம் அவர்

கூடி இருவரும் ஜோடியாகவே
வேடிக்கை கேலியில் நாடி இருகையில் அந்த
இந்திர மகள் தெய்வானையும் தேடவே வள்ளி
ஐயோ கந்தன இல்லை என்று வோடவே

கை கால் அயர்ந்து வள்ளி மெய் மறந்து நிற்கயிலே
தெய்வானை வந்து சண்டை தொடுக்கவே வள்ளி
ஐயோ கந்தன் இல்லை என்று தடுக்கவே எங்கள்

அருமை சண்முகம் பொருமையாகவே
இருவரே ஏய்துமே சுருக்கினில் ஓடியே அந்த
புலிய மரபொந்திலே நுழைந்தாரம் கந்தன்
நலியாமல் மேல் புரமாக எலுந்தாரம்

குமரருக்கும் குஞ்சரிக்கும் தர்க்கம்

தங்கமாணிக்கம் மெட்டு

ஆடும் திரு நடனம் அப்பன் திருகாக்ஷி காண்க
    தேடியே வந்தோமையா
செல்வ பக்தர்களே நாம் சென்றிடுவோம்
    கதிர்மலைக்கே என் குமர பக்தர்களே

சுப்ரமணியர்

மட்டிலடங்காத வனவேடன்
    தன்மகளே கட்டி கரும்பே தனே
என் கனகமாமணியே வந்து கணநேரம் ஆகுதடி
    என களபமா மயிலே

வள்ளி

அண்டார்புகழ்ந்த திரு தண்டாயுத குமரா
    எண்டிசையோர் புகழ்ந்திடும்
என் அருமை ஷண்முகனே நீர் எங்கே போகவேணுமையா
    என குமர ஷண்முகனே

சுப்ரமணிர்

இந்திரன மகள் தெய்வானை எங்கே என்று
    தேடுமுன்னே தந்திரமாய்
போகவேணும் என் ஜாதி மாமணியே
    இது சமய விடைகொடடி என் சைசு ரத்தினமே

வள்ளி

உங்கத்த மகள் தெய்வானை
    அதிகாரி அங்கிருக்க இந்த சத்திவேல் ஒளிந்துவர
என் அருமை ஷண்முகனே உமக்கு
    தாம்பூலம் கொடுத்தாரு என் சென்தூர் புண்ணியனே

சுப்ரமணியர்

மங்கை தெய்வானையிடம் வார்த்தை
    ஒன்றும் சொல்லாமல் கங்கை நதி ஆடவந்தேன்
என கனகமாமணியே நான் கட்டாயம் போகவேணும்
    என வன சூர மகளே

வள்ளி

அந்தரமாக நீங்கள் தந்தரமாய் இங்கே விட்டு
    கந்தசாமி போரோனொலுல்
என் அருமை ஷண்முகனே சுவாமி போர
    சமர்தை பார்போம் என செந்தூர் புண்ணியனே

சுப்ரமணியர்

மடிய பிடிக்காதே வழிமறித்து நிற்காதே
    திழகுரவர் ஜாதி கண்டேன்
என் சைசு ரத்தினமே என் சங்கதியை காட்டணுமா
    என் ஜாதி மாமனியே

வள்ளி

தங்க வேலாயுதனே சங்கதி நீர் காட்டிவிட்டால்
    இந்த மங்கை வள்ளிபயந்தவளோ
என் அருமை ஷண்முகனே
    உங்கள் வழக்கம் தெரியாதோ என் குமர ஷண்முகனே

ஸ்ரீ கதிரை நாதன்

ஸ்ரீ அரோகராத் துதி

சிரிய விருத்தம்

அண்ட பகிரண்டமே தொண்டாயுதத்துடன்
அரக்கனை வென்ற வேலு
ஹரி மருகனுன திரு குரு முருக ஞானவடி
அப்பனே குமர வேலு
சண்டப் பிரசண்டனு தொண்டர்க்குத் தொண்டனு
சமர்த்தனு வந்த வேலு
சதுரகிரி மாமலை பதிபுகழும் வீரனே
சண்முகச் சுவாமி வேலு

மண்டலம் மீதினில் பண்டாரக் கோலமா
மயிலேறி நின்ற — வேலு
வச்சிரத் தங்கமென சற்சனர்கள் போற்றிடும்
மரகத மணியின — வேலு
கண்டவர் பிரமிக்க சண்டாள ரக்கனை
கருவருத்திட்ட — வேலு
கருணை திரு மூர்த்தியெ தருணம் வர கார்த்திகா
கவலை தீர் கதிரை — வேலு
சங்காதி சங்கமே சண்முகா என்றதிரு

சக்திஉமைப் பெற்ற — வேலு
சரவணப் பொய்கையில் பிரணவ சொரூபனு
தானவ தரித்த — வேலு
அங்கங்கு பக்தர்கள் எங்கும் பிரகாசமாய்
அபிஷேகம் செய்யும் — வேலு
அவனி பதினுலுமே புவனகுரு என்றுனை
அடைக்கலம் எங்கும் — வேலு

மங்காத மலைமீதில் தங்க வடிவேலுடன
வந்தவர்க் கருளும் — வேலு
மகேந்த்த ராஜனின் மகள் தெய்வானையை
மணம் புரிந்திட்ட — வேலு
எங்கள் குல தம்பிரான் திங்களணி புத்திரா
ஈராறு கரத்தின — வேலு
இது சமயம் வந்து நீ என் குறையகற்றுவாய்
யேழுமலைக் கதிரை — வேலு

ஓம் என்ற புவிமீதில் உப்பென்ற பாண்டமதில்
உளனென்ற அறையி — னுள்ளே
உயிரென்ற விதைநாட்டி பயிரென்ரு முளையாகி
ஒனபதும் என்று — மாகி
ஞாம் என்ற தொனியுடன் ஊம் என்ற வெளிவந்து
நானென்ற பேரு — மாகி
நங்கை யிளமங்கைகள் தங்கமென முத்தமிட
நாலுகால் நடையு — மாகி தேரி

தாமென்றெழுந்தோடி தாயென்றழுதுமே
சாதங்கள் உண்டு —
தருணம் முருகையனே கருணைமொழி உன்னருள்
தன்மை குரு வாக்கியம் — பெற்று
நாம் என்று வந்தவனை ஆமென்று காத்தவனே

நாடியே உனைத்தேடி - நேன்
நாதனே மறைபுகழும் வேதனே எனையாளும்
நாயகா கதிர் - வேலனே
முட்டாளுடன் கூடி கெட்டுத்திரிந்து நான்

மூத்தோர் சொல் கேளாதிருப் - பேன்
முகில் தந்த அன்னையை பகையாழி போலவே
மூர்கமா பேசியிருப் - பேன்
பட்டாவின் கத்தியை எட்டி நான் விசியே
பாரினில் உருமியிருப் - பேன்
பச்சப் புழுகள் இலச்சக் கணக்காக
பாவி நான் சொல்லியிருப்- பேன்

கட்டான மாதரை மட்டிதனத்தால் சில
காரணம் பேசியிருப் - பேன்
கள்ளன் கபடனு உள்ளபடி வாங்கின
கடனகளும் கொடாதிருப் - பேன்
எட்டா பழத்திற்கு கொட்டாவி யிட்டதுபோல்
எத்தனையோ எண்ணியிருப் - பேன்
எல்லாம் பொருத்தருள் வல்லாழ வீரனே
எனையாளும் கதிர் - வேலனே

சீர்பெற்றிலங்கிடும் பேர்பெற்ற மாமலை
ஜெகமெச்சும் சிங்கம் - நீயே
சித்திர முத்துமணி வெற்றிவடி வேலனுடன்
சிகரமதில் நின்றோன் - நீயே
நேர்கொண்டரக்கனை போர்முனை கொடுத்து நீ
சீர்த்துளி செய்து - நீயே
நீல மயிலேறி நீ கோலகலத்துடன்
நீனிலம் சுற்றும் - நீயே

ஆங்ககர யானையும் வேங்கை புலி கரடியும் அடக்கி
நீ ஆண்ட முருகா
அவ்வென்றும் கிளி என்றும் ஓம் என்றும் சிவா என்ற
அச்சரம் உனக்கு முருகா
பாங்கான அறுகோண நீங்கார ஒங்கார பாடலும்
உனக்கு முருகா
பகறுகிற அகரமொடு ரகாமும் சிகரவான
பரம குருவான முருகா

இரத்தினபுரி — பலாங்கொடை — ரக்வான்

இப்பகுதி தோட்டங்களில் எல்லோரும் எங்களிடமே வேலைகள்
செய்து கொள்கிறார்கள்.
நீங்களும் எங்களை மறவாதிருக்க வேண்டும்

தபாலில் எழுதினால் வேண்டிய வேலைகள் செய்து
தபாலில் அனுப்பப்படும்.

விக்டோரியா அச்சுக்கூடம்
இரத்தினபுரி.